# LAABH SAMACHAR

Volume: 09 Issue : 10 JANUARY 2021 Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE







அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343
TEXMO
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles
பர்வதா டிரேடர்ஸ்
செல்: 94439 30728
Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Uses second hand Woven bags also available
37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014
Thirumalay Tradings
presents
V Carry Bags
MINIMUM ORDER 100 BAGS.
LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS
To Order: 94438 31496
Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India
* Share in your happiness with your relatives and friends
* Satisfy your customer
* Stylish to carry
* Multipurpose bags
Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அல்கிதெ ஃகோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

ஜனவரி மாதம், இந்த உலகத்திற்கு புத்தாண்டு மாதம், சுதந்திர இந்தியாவிற்கு புதிய சட்டம் இயற்றப்பட்ட மாதம், தமிழர்களுக்கு தை பிறந்தால் வழி பிறக்கும் மாதம், நம் ஸௌராஷ்ட்ரர்களுக்கு ஆன்மிகம் மற்றும் சமூக பொருளாதாரத்தை உயர்த்தி பிடித்த இரண்டு மகான்கள் அவதரித்த மாதம், இத்தனை பெருமைகளை கொண்ட இந்த ஜனவரி மாதத்தில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ம் துவக்கப்பட்டது பெருமையளிக்கிறது. சேம்பர் அங்கத்தினர்கள் தொடர்ந்து தங்களின் ஆதரவு சேம்பருக்கு வழங்கிடக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த உலகமே எதிர்பாராத மிகப்பெரிய சம்பவத்தை கடந்த 2020ம் ஆண்டில் கொரோனா ஏற்படுத்திவிட்டது. மிகப்பெரிய பொருளாதார தாக்கம், அனைத்து தொழில் வர்த்தகத்தையும் பாதித்துவிட்டது. இந்த 2021ம் ஆண்டு அதிலிருந்து மீண்டு அனைவரையும் நல்வழிப்படுத்தும், பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் பயணிப்போம்.

இந்தியாவின் தயாரிப்பில், கொரோனவிற்கு புதிய தடுப்பு மருந்தை மத்திய மாநில அரசு நம் மக்கள் அனைவரும் எடுத்துக்கொள்ள கேட்டுக்கொண்டுள்ளது. நம்மையும் நம் சுற்றத்தார் மற்றும் சமுதாய நலனிலும், அக்கறை கொண்டு இந்த கொரோனா தடுப்பு மருந்தை அவசியம் அனைவரும் எடுத்துக்கொள்ள வேண்டும் என நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

நமது தமிழக அரசு, மொழியியல் சிறுபான்மை மக்களுக்காக தனி வாரியம் அமைக்க உள்ளது. அதன் மூலம், மொழியியல் சிறுபான்மையினரின் சமூக-பொருளாதார நிலைமைகளைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் கூறியுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. நமது ஸௌராஷ்ட்ர சிறுபான்மை மொழி இனத்தவர்கள் இதனை மனதார வரவேற்கிறோம். நன்றி

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்**
**சால மிகுத்துப் பெயின்**

ஸௌராஷ்ட்ர மொழியில்: ம்ஹொருபீ் பொ$^{3}$ண்டி$^{3}$ மெள்ள முட$^{3}$ ஜாய்சாத் தேவஸ்து
ஹார்ஹோரு பா$^{4}$ர்ஹிங்க$^{3}$ டே$^{3}$த்

**பொருள்:** (யாரானாலும் தம்முடைய சக்திக்கு மீறிச் செய்துவிட முடியாது) மிகவும் இலேசான மயில் தோகையைப் பாரம் ஏற்றிய வண்டியானாலும் அந்த மயில் தோகையையும் அளவுக்கு மீறி அந்த வண்டியில் ஏற்றினால் அதன் அச்சு முறிந்துவிடும்.

அதிகாரம் 48 — வலியறிதல் (தனக்குள்ள சக்தியின் அளவை அறிவது) — அரசியல்

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

– K.K. தினேஷ்

**17.12.2020** – நிலையூர் N.K. குப்பய்யன் பள்ளி கவுன்சில் தலைவரும், ஸௌராஷ்ட்ர சமூக நலப்பேரவையின் முன்னாள் துணைத்தலைவரும், அமிர்தம் ஸ்வீட்ஸ் பங்குதாரருமான திரு. A.N.M.R. **கணேஷ் பாபு** அவர்களின் மறைவிற்கு சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**29.12.2020** – சேம்பர் நிர்வாகிகளுக்கு, **ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி**யின் மகாசபை கூட்டத்தில் கலந்து கொள்ள அழைப்புவிடுத்திருந்ததை ஏற்று, சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**30.12.2020** – நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் **பதிமூன்றாம் ஆண்டு பொதுக்குழு** கூட்டம் சேம்பர் அரங்கில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமைத்தாங்கினார். சேம்பர் அங்கத்தினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**30.12.2020** – தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. **செல்லூர் கே. ராஜு** அவர்கள் மரியாதை நிமித்தமாக சேம்பர் நிர்வாகிகள் மற்றும் அங்கத்தினர்களை சந்தித்துப்பேசினார். இந்த கூட்டத்தை ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. T.S. **சாரதி** அவர்கள் ஏற்பாடு செய்தார்.

**05.01.2021** – **ஆபரணம்** என்ற அழகான தலைப்பில் அற்புதமான நிகழ்ச்சி இந்த ஆண்டின் முதல் நிகழ்ச்சி மிகச்சிறப்பாக அமைந்தது. இந்த கூட்டத்தில் ஸௌராஷ்ட்ர பொற்கொல்லர்கள் சங்கத் தலைவர் திரு. B.J. **கேசவகுமார்** மற்றும் செயலாளர் திரு. L.T. **மணிகண்டன்** ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர். கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பர் நிகழ்ச்சிக் குழுத்தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

**07.01.2021** – நம் சமூகத்தின் அரசியல் பிரமுகரும், நமது சேம்பர் உறுப்பினருமான திருமதி. A.R. **மஹாலஷ்மி** அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்து, திருமதி. A.R. **மஹாலஷ்மி** அவர்களை வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் குடியரசு தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


கடந்த 2020ம் ஆண்டு, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் நடைபெற்ற நிகழ்ச்சிகளை இந்த இதழில் கண்டு ரசிக்கலாம். கொரோனாவினால் பெரும் முடக்க காலத்திலும் நமது சேம்பர் முடங்காமல் தொடர்ந்து அங்கத்தினர்கள் நலனிற்காக ஆன்லைன் வழியாக செயல்பட்டுக் கொண்டிருந்தது. அது குறித்து அழகான வண்ண புகைப்படங்களுடன் இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ராஷ்ட்ரபந்து ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களின் 151வது பிறந்த தினத்தை நமது சேம்பர் கொண்டாடியது. இதில் பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர். அவர்களுக்கு ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களைப் பற்றிய ஆக்கப்பூர்வ செயல்களை மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேசிய மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. **சரவணன்** அவர்களுக்கு சேம்பர் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- B.S. ஜெனார்த்தனன்


SRIS TEXTURE
ONLY TEXTURE SINCE 2009

Cell: 97891 08600
SRIS INTERIOR
* INTERIOR * WALL TEXTURE
* CONSTRUCTION CHEMICAL
No: 72, Devangar High School Road,
Coimbatore - 641 002
ID: srisinterior@rediffmail.com





தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...
ரீஜென்சி டிரேடிங் கம்பெனி
5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை–625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051
அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்



O.V.K. பாஸ்கரன்
V.K. ஜெயசங்கர்

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk



https://m.facebook.com/story.php?story_fbid=1001860170337235&id=705175606261210&sfnsn=wiwspmo



புதிய தொழில் நுட்பத்துடன்... பாரம்பரிய முறையில்...

# ஆபரணம்

நம் ஸௌராஷ்ட்ர சமூக பொற்கொல்லர்கள் தயாரிப்பில்...





2021ம் ஆண்டின் துவகத்தில் முதல் நிகழ்ச்சியாக **ஆபரணம்** என்ற தலைப்பில் கடந்த 05.01.2021 அன்று நமது சேம்பர் அரங்கில் நடத்தப்பட்டது. இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பர் நிகழ்ச்சிக்குழு தலைவர் திரு T.R. **சரவணன்** அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக, ஸௌராஷ்ட்ர பொற்கொல்லர்கள் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் திரு. B.J. **கேசவகுமார்** மற்றும் செயலாளர் திரு. L.T. **மணிகண்டன்** ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

இந்த நிகழ்ச்சி சமூக வலைத்தளமான முகப்புத்தகத்தில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. சமூக வலைத்தளத்தின் மூலம் இந்த நிகழ்ச்சிக்கு பார்வையாளர்களின் ஆதரவு மிகுந்து காணப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது. சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட திரு. B.J. **கேசவகுமார்** மற்றும் திரு. L.T. **மணிகண்டன்** ஆகியோரை நமது சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. **குபேந்திரன்** அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

முதலில், திரு. B.J. **கேசவகுமார்** அவர்கள் பேசுகையில், இன்றைய அவசர உலகில் ரெடிமேட் நகைகளை நாடிச் செல்லும் பழக்கம் மக்களிடையே அதிகரித்துவிட்டது. பாரம்பரிய நகைகள் என்பதில் தான் அறிவியல் புதைந்துள்ளது.

ஒரு ஆபரண அணிகலன் என்பது, அணியும் நபருக்கு ஏற்றார் போல, இப்படித் தான் இருக்க வேண்டும், இந்த அளவில் தான் தயாரிக்க வேண்டும் என்கிற அறிவியல் கோட்பாடுகள் உள்ளன. அப்படிப்பட்ட நகைகளை அணியும்போது தான் அணிபவருக்கு நேர்மறை சிந்தனை, ஆரோக்கியம் போன்ற நற்பலன்களை தருகிறது.

இன்று மக்கள் தங்கள் விருப்பப்படியான வாழ்க்கை முறையினை வாழும்போது, நகைகளையும் தங்கள் விருப்பம் போல் அணியவே ஆசைப்படுகின்றனர்.

**ஆபரணம், அலங்காரப்பொருள் அல்ல... அறிவியல் பூர்வமானது...** இதுவே பாரம்பரிய முறையிலான நகைகளில் உள்ள ஏற்றம். இந்த உண்மைத்தன்மையை அறிந்து கொண்டு செயல்பட வேண்டும் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

திரு. L.T. **மணிகண்டன்** அவர்கள், தங்க நகைகள் கிடைக்கும் இடம், அதன் தன்மைகள், தொழில் நுட்பத் தகவல்கள், இன்றைய தங்க சந்தை நிலவரம் என பலதரப்பட்டத் தகவல்களையும், அங்கத்தினர்களின் பல்வேறு சந்தேகங்களையும் மிக அழகாகவும், தெளிவாகவும் விளக்கினார்.

கலந்து கொண்ட அங்கத்தினர்கள் அனைவருக்கும் இந்த நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. சிறப்பு விருந்தினர்கள் இருவருக்கும் சேம்பர் சார்பில் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.







Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633


ஒரு மாஸ்க்கை 8 மணி நேரம் மட்டுமே அணியலாம்



https://youtu.be/-JMVniVMLr0

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care



PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrance Pvt. Ltd



K.K.Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

## ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் பதிமூன்றாம் ஆண்டு பொதுக்குழு கூட்டம்




நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் **பதிமூன்றாம் ஆண்டு பொதுக்குழு கூட்டம்** கடந்த 30.12.2020 அன்று மாலை 5 மணிக்கு நடைபெற்றது. கொரோனா பெருந்தொற்று காரணமாக அரசின் அறிவுறுத்தலின்படி நடத்தப்பட்டது. சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்தில் 2019-20 ஆண்டறிக்கையும், வரவு செலவு கணக்குகளும் சமர்ப்பிக்கப்பட்டது. கூட்ட நிறைவுக்குப்பிறகு, மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. **செல்லூர் கே. ராஜு** அவர்கள் சேம்பருக்கு மரியாதை நிமித்தமாக கலந்து கொண்டு பேசினார். இந்த கூட்டத்தில், **ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கி** தலைவர் திரு. T.S. **சாரதி**, துணைத்தலைவர் திரு. S.K.B. **சந்திரபிரகாஷ்** மற்றும் இயக்குனர்கள் கலந்து கொண்டனர்.




ஸௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கியின் 102ம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் கடந்த 29.12.2020 அன்று நடைபெற்றது. இதில் சேம்பர் நிர்வாகிகள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். கூட்டம் துவங்குவதற்கு முன்பு, ராஷ்ட்ரபந்து ஸ்ரீமான் L.K. **துளசிராம்** அவர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த கூட்டத்திற்கு வங்கியின் தலைவர் திரு. T.S. **சாரதி** அவர்கள் தலைமைத் தாங்கினார்.

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** என் கணவர் நீரிழிவு நோயால் அவதிப்படுகிறார். நான்கு மாதங்களாக தீராத தோள்பட்டை வலி உள்ளது. தோள் மூட்டினில் Periarthritis உள்ளதாக மருத்துவர் கூறியுள்ளார். தோள்மூட்டு சிறப்பு நிபுணர் இதற்கு மூட்டு நுண்துறை சிகிச்சை செய்யவேண்டும் என்கிறார். மூட்டு நுண்துறை சிகிச்சை என்றால் என்ன?

**பதில்:** மூட்டு நுண்துளை சிகிச்சை Arthroscopy என்று கூறப்படுகிறது. இதில் 2 சிறு துவாரங்கள் மூலம் மூட்டின் பிரச்சனைகளை சீரமைக்க முடியும். நுன் கேமரா செலுத்தி மூட்டினில் உள்ளே உள்ள உறுப்புகளை காணமுடியும். முதலில் முழுங்கால் மூட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த சிகிச்சை தற்போது தோள்பட்டை, கணுக்கால், முழங்கை, இடுப்பு மூட்டு மற்றும் மணிக்கட்டு மூட்டிற்கும் செய்யப்படுகிறது. இந்த சிகிச்சையில் வலி மிக குறைவு. இரத்த சேதாரம் இல்லை. குணமாவது மிக விரைவு, மருத்துவமனையில் தங்குவது ஒன்று அல்லது இரண்டு நாட்கள் மட்டுமே.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,
வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436






PG India
Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in



P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI

ஸ்ரீ முருகன் துணை
K.S. மோகன்லால்



ஹரிலால்
பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்
குறிப்பிட்ட நேரத்தில்
டெலிவரி செய்யப்படும்

98430 72626
98425 72626

- செங்கல்
- மணல்
- ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
- கிராவல்
- கிரஷர் தூசி
- சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
- உடைகல்



No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

# சல்பா இண்டஸ்ட்ரீஸ்

## வீட்டு உபயோகப் பொருட்கள்

18–ஏ, வெங்கலக்கடைத் தெரு, மதுரை – 1. போன்: 0452 4250844
63/5, விரகனூர், மகாராஜன் நகர், ராமநாதபுரம் ரோடு, மதுரை – 9.
செல்: 98945 44813

**கீழ்கண்ட வீட்டு உபயோகப் பொருட்கள்**
**மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.**

* பினாயில் காம்பவுண்ட்
* டாய்லட் கிளினர்
* சோப் ஆயில்
* வாஷிங் லிக்யூட்
* டாய்லட் கிளீனர் (ஹார்பிக்)
* தரைசுத்திகரிப்பு ஆயில் (லைசால்)
* பாத்திரம் சுத்தம் செய்யும் ஆயில் (ப்ரில்)
* ஹாண்ட் வாஷ் லிக்யூட்
* ஆசிட் சிலர்ரி
* பிளிச்சிங் பவுடர்
* வாஷிங் சோடா
* காஸ்டிக் சோடா
* டிஸ்டில்டு வாட்டர்
* வாஷிங் பவுடர் செட்
* டிடர்ஜண்ட் பவுடர்
* ஒயிட் பினாயில்
* டிஸ்வாஸ் கேக்
* டிடர்ஜண்ட் சோப்ஸ்
* ஓம வாட்டர்
* டினோ பால்
* பாத்ரூம், டாய்லட் சம்பந்தபட்ட பொருட்கள் வாசனை திரவியங்கள் மற்றும் இதர கெமிக்கல்கள்



K.K.Karunakaran
Mobile : 98409 60844
82206 94087
Factory : 98945 44813



# மொழியியல் சிறுபான்மையினர் நிலைமைகளை மேம்படுத்த

## தமிழகம் புதிய நிறுவனத்தை அமைக்கிறது

Source: The Times of India - 12. Jan.21 / Tamil Trnsln.: Laabh Samachar Bulletin Team

பல்வேறு அரசு சேவைகளை அணுகுவதற்காக மாநில அரசு தமிழ்நாடு மொழியியல் சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை அமைத்துள்ளது. மொழிகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் நிறுவனம் நடவடிக்கை எடுக்கும்.

தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது மற்றும் ஸௌராஷ்ட்ரா பேசும் மக்கள் மாநிலத்தின் முக்கிய மொழியியல் சிறுபான்மையினர். மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011-ல் மாநிலத்தில் 83.84 லட்சம் மொழியியல் சிறுபான்மையினர் உள்ளனர். இது மொத்த மக்கள் தொகையில் 11.63% ஆகும். மாநிலத்தில் உள்ள சிறுபான்மையினரின் தேவைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்துவதற்காக மாநகராட்சியை அமைப்பதாக முதலமைச்சர் அறிவித்தார். என்று கிமு, எம்.பி.சி மற்றும் சிறுபான்மையினர் நல முதன்மை செயலாளர் பி சந்திர மோகன் கூறினார்.

மொழியியல் சிறுபான்மையினரின் சமூக-பொருளாதார நிலைமைகளைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான முயற்சிகளை இந்த நிறுவனம் வழிநடத்தும் என்று அந்த அதிகாரி கூறினார். இந்த முயற்சி நாட்டில் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதற்கும், வழிநடத்துவதற்கும், சிறுபான்மை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வாதங்களை முன்னெடுப்பதற்கும், நன்மைகளுக்கான அணுகலை உறுதி செய்வதற்கும் இந்த நிறுவனம் ஒரு நோடல் நிறுவனமாக செயல்படும்.

வணிகத்தை நடத்துவதற்காக, நிதி, தொழில்கள் மற்றும் வணிக மற்றும் கூட்டுறவு சங்கங்கள் உட்பட பல்வேறு துறைகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய 16 உறுப்பினர்களைக் கொண்ட இயக்குநர்கள் குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது. கல்வி நிறுவனங்களை நிறுவுவதை ஊக்குவித்தல், மொழியியல் சிறுபான்மையினரின் தேவைகளை மையமாகக் கொண்டு கல்வி அணுகலை ஊக்குவிப்பதே கழகத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

தனிநபர்கள் அல்லது குழுக்கள், கடன்கள் மற்றும் அட்வான்ஸ் மூலம் உதவப்படும். மைக்ரோ ஃபைனான்ஸ், சுயதொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் ஸ்டார்ட்அப் போன்ற பிற முயற்சிகள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தலையீடுகள் உள்ளிட்ட திட்டங்களை இந்த நிறுவனம் ஊக்குவிக்கும் என்று ஒரு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை டிசம்பர் மாதம் சிறுபான்மையினர் நல இயக்குநரின் முன்மொழிவைத் தொடர்ந்து, மாநிலத்தில் உள்ள மொழியியல் சிறுபான்மையினர் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை எழுப்புகிறது.

மொழியியல் சிறுபான்மையினர் தங்கள் விருப்பப்படி ஒரு மொழியியல் கல்வியை அணுக இயலாமை, வேலைவாய்ப்பு, வணிகத்தில் பிரதிநிதித்துவம் மற்றும் பொருளாதார வாய்ப்புகளுக்கான போதிய அணுகல் உள்ளிட்ட பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். மொழியியல் சிறுபான்மையினரிடையே திட்டங்களை மோசமாக எடுத்துக்கொள்வது கவலைக்குரியது என்று உத்தரவில் கூறப்பட்டுள்ளது. ஆகவே, வணிக வங்கிகள் உள்ளிட்ட நிறுவனங்களிடமிருந்து கடன்களைத் திரட்டக்கூடிய ஒரு தனி நிறுவனத்தை அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. வருவாய் துறை பல்வேறு திட்டங்களின் கீழ் சலுகைகளைப் பெற மொழியியல் சிறுபான்மையினருக்கான சான்றிதழ்களை வழங்கும்.


**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
18 ஆண்டு சேவை
**மகாத்மா முதியோர் இல்லம்**
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
**ஒருநாள் நீங்களும் உதவலாமே**
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

UIN No. Applied
MFG. No. 8/25 D
**பிளாஸ்மோடின் கேப்ஸ்ல்ஸ் 500 mg.**
எதிர்ப்பு சக்தி அதிகரிக்க
**PLASMODIN CAPSULES 500 mg.**
Increase Immunity Power



Prop. : B.K.D. Suresh
4/150, Virathanur Road, Ayyanarpuram, Paniyur Post, Madurai - 9. Mobile : 93607 96538


COMMUNITY WELFARE NEWS






https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be

## பட்டமளிப்பு - வாழ்த்துக்கள்



பல்லாண்டு காலமாக ஸ்ரீமந் நாயகி இயக்கம் ஸ்ரீமந் நாயகி வேத பாடசாலை மூலம் வேதங்களைக் கற்பித்து வருவதோடு ஐந்தாவது வேதம் என்று போற்றப்படும் மகாபாரதத்திலிருந்து ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமஸ்தோத்திர பாராயணம் சனிக்கிழமை தோறும் தமது வேத பாடசாலை, திருக்கோயிகளில், பக்தர் இல்லம் முதலிய இடங்களில் நடத்தி வரும்... அத்யயனம் மத்வ ஸ்ரீ K.R. **ராமாச்சாரி** குருஜீக்கு **வேத வித்யா ரக்ஷக்** எனும் பட்டம், கடந்த 27.12.2020 அன்று ஸ்ரீமந்நாயகி இயக்கம் சார்பில், திரு. R.B.R. **ராமசுப்பிரமணியன்** தலைமையில், மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. **சரவணன்** அவர்கள் முன்னிலையில் வழங்கி கௌரவிக்கப்பட்டார். நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மத்வ ஸ்ரீ K.R. **ராமாச்சாரி** குருஜீ அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

## நிர்வாகிகள் தேர்வு - வாழ்த்துக்கள்



G R SUBRAMANIAN EC MEMBER



T K SIVANATH BABU EC MEMBER

ஸௌராஷ்ட்ர ஜிம் கமிட்டியின் தேர்தல் கடந்த 13.12.2020 அன்று நடைபெற்றது. இதில் துணைத்தலைவராக சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. G.R. **சுப்பிரமணியன்** அவர்களும், செயற்குழு உறுப்பினராக, சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. T.K. **சிவநாத் பாபு** அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நமது சேம்பர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

## தமிழக அரசு விருது - வாழ்த்துக்கள்





தமிழக அரசின் 2020ம் ஆண்டிற்கான விருதை நம் ஸௌராஷ்ட்ர சமூகத்தை சேர்ந்த இருவருக்கு வழங்க அறிவிப்பு வெளியாகியுள்ளது. தமிழ்த்தென்றல் திரு. வி.க. விருதை தினமணியின் மூத்த பத்திரிக்கையாளர் திரு. V.N. **சாமி** அவர்களுக்கும், சிறந்த மொழிபெயர்ப்பாளருக்கான விருதை சுவாமி **விமூர்த்தானந்தர் மகராஜ்** அவர்களுக்கும் வழங்க இருப்பதாக அரசு தரப்பில் வெளியான அறிப்பினை ஏற்று நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் இருவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. இது நம் சமூகத்திற்கு கிடைத்த பெருமை.


**WEBSITE FOR SCC MEMBERS AT OFFER PRICE**

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உறுப்பினர்களின் தொழில் வர்த்தக வளர்ச்சிக்காக

சிறப்பு விலை ரூ. 365/- ல்

வெப்சைட் உருவாக்கித் தருகிறது.

அனைத்து தொழில் துறை சார்ந்த

அங்கத்தினர்களும் இதில் இணைந்து

தொழில் அபிவிருத்தி செய்து கொள்ளலாம்.

விபரங்களுக்கு: 93441 97952, 80566 56889


## புதிய தொழில் துவக்கம் - வாழ்த்துக்கள்

பெண்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களில் நாப்கினும் ஒன்று. சாதா நாப்கின்களில் டையாக்ஸின் எனும் ரசாயனம் உள்ளது. இந்த ரசாயன நாப்கின்களை பயன்படுத்துவதால் பெண்களின் ஆரோக்கியமும் வாழ்க்கை முறையும் பாதிக்கிறது. இதற்கு மாற்றாக, இயற்கை முறையில் மூலிகை நிறைந்த சானிட்டரி நாப்கின்களைப் பயன்படுத்தினால், மாதவிடாய் பிரச்சனைகள், வெள்ளைப்படுதல், கர்ப்பப்பை புற்றுநோய், துர்நாற்றம், பிசிஓடி நீர்கட்டி போன்ற பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம். இன்று இயற்கை சார்ந்த பொருட்கள் மீதான ஆர்வமும், விழிப்புணர்வும் மக்களிடத்தில் வெகுவாக வரத்துவங்கிவிட்டது.



இதனை கருத்தில் கொண்டு, நம் சமூகத்தைச் சேர்ந்த சங்கத் ஹெல்த் கேர் நிறுவனத்தார் ஹெர்பல் சானிட்டரி நாப்கின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். நிறுவனத்தை நமது சமூக பெண் தொழிலதிபரும், அரசியல் பிரமுகருமான திருமதி. A.R. **மஹாலஷ்மி** அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அவர்களின் தயாரிப்பை வரவேற்று பாராட்டியுள்ளார். சேம்பரும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது. நம் ஸௌராஷ்ட்ர சமூக மக்களும் ஆதரவு அளிக்க வேண்டுகிறோம்.


Prop. M.S. Divyarani

HerboCare

Fly Leakage Free

Herbal Sanitary Napkins

ஹெர்பல் சானிட்டரி நாப்கின்ஸ்



Customer Care: 99441 66722, 99447 95787

மாதவிடாய் குறைபாடுகளில் இருந்து குணமடைய எங்கள் ஹெர்போகேர் ஹெர்பல் சானிட்டரி நாப்கின்களை பயன்படுத்துங்கள்

L, XL, XXL அளவுகளில் கிடைக்கிறது

Mfrd. By

Sanghath Health Care

42, South Masi Street,

Madurai - 625001

email: herbocareproducts@gmail.com

## 2020ம் ஆண்டில் நடைபெற்ற சேம்பர் கூட்டங்கள் (கொஞ்ஞானவிற்கு மன்)



| | | |
|---|---|---|
| Program | : | **COMMUNITY BUSINESS MODEL** |
| Date | : | 01.01.2020 |
| Venue | : | Sriman Nayagi Vidya Mandir Mat. Hr. Sec. School Hall |
| Chief Guest(s) | : | Mr. K.R.M. Niranjan Kumar<br>Founder, Niranjan Group of Companies, Calicut &<br>Mr. M.K. Kaladhar Babu<br>MD., Pandian Printpacks Pvt. Ltd. Madurai. |
| Special Event | : | Bharathanatiyam by Nandhini Kalalaya Students |
| Presided By | : | Mr. Kumaran B Jaghuva, President, SCC |



| | | |
|---|---|---|
| Program | : | **INTERACTIVE SESSION** |
| Date | : | 11.01.2020 |
| Venue | : | JC Residency |
| Chief Guest(s) | : | Hon. RAJMODI,<br>Deputy Minister, Ministry of Industries and Commerce, Zimbabwe |
| Presided By | : | Mr. Kumaran B Jaghuva, President, SCC |
| Object | : | Business opportunity and collaboration with Zimbabwe |



| | | |
|---|---|---|
| Program | : | **LAUNCH OF NEXTGEN** |
| Date | : | 24.01.2020 |
| Venue | : | COURTYARD MARRIOT |
| Chief Guest(s) | : | Mr. Biswajit Subramanian, MD., Mount Urgull Partners Ltd. London,<br>Mr. Giridhar Kobla, HCL Technologies Ltd. Chennai.<br>Mr. Bala Venkat Kutty Chairman, BVK Group of Companies, CHI. |
| Presided By | : | Mr. M.K. Kaladhar Babu, Imm. Past President, SCC |
| Presidentship | : | Mr. T.M. Rubesh Babu |



| | | |
|---|---|---|
| Program | : | **REPUBLIC DAY CELEBRATION** |
| Date | : | 26.01.2020 |
| Venue | : | Sourashtra Chamber Hall |
| Chief Guest(s) | : | Dr. T.G. Kuppusamy, Palkar Hospital, Bathe Vivek Clinic. |
| Prog. Presided &<br>Flag Hoist by | : | Mr. T.R. Mohanram, Vice President, SCC |



| | | |
|---|---|---|
| Program I | : | **BUDGET 2020** |
| Date | : | 04.02.2020 |
| Venue | : | Sourashtra Chamber Hall |
| Chief Guest(s) | : | CA. S.T. Venkatesh, Chartered Accountant |
| Program II | : | **CREATIVE IDEAS FOR MARKETING THROUGH WHATSAPP BUSINESS** |
| Chief Guest | : | Mr. S.S. Premkumar, M/s. Claymore IT Services Pvt. Ltd. |
| Presided by | : | Mr. Kumaran B Jaghuva, President, SCC |



| | | |
|---|---|---|
| Program | : | **INTERACTIVE SESSION** |
| Date | : | 15.02.2020 |
| Venue | : | Sourashtra Chamber of Commerce Hall |
| Chief Guest(s) | : | Mr. Kumara Jetty,<br>Director, Indonasia Trade Promotion Council |
| Presided By | : | Mr. K.K. Dinesh, General Secretary, SCC |
| Object | : | Business opportunity and collaboration with Indonasia |



| | | |
|---|---|---|
| Program | : | **WOMEN IN BUSINESS** |
| Date | : | 03.03.2020 |
| Venue | : | Sourashtra Chamber of Commerce Hall |
| Chief Guest(s) | : | Mrs. P.K. Punithavathi, M/s. Sathyabama Catering, Madurai.<br>Mrs. M.K. Durga Devi, Research in Tamil for Doctorate.<br>Dr. Banu Ramesh Babu, Herbal Medical Consultant |
| Presided by | : | Mrs. Karthiga Lakshmi Jaghuva Kumaran |
| Object | : | To Motivate Women Entrepreneurs |

# கொரோனா ஊரடங்கின்போது ஜூம் செயலி வழியாக நடைபெற்ற தொழில் கூட்டங்கள்



# சேம்பரின் கொரோனா நிவாரணம் உதவிகள்



## சிறப்பு சந்திப்புகள்
















## கொரோனா ஊரடங்கு தளர்விற்கு பிறகு சேம்பரில் நடைபெற்ற கூட்டங்கள்

| | | |
|---|---|---|
| Program | : | **INDEPENDENCE DAY CELEBRATION** |
| Date | : | 15.08.2020 |
| Venue | : | Sourashtra Chamber of Commerce |
| Chief Guest(s) | : | Nil |
| Flag Hoist | : | Mr. Kumaran B Jaghuva, President, SCC |

## MADURAI RUN - 1st ANNIVERSARY CELEBRATION

கடந்த ஆண்டு சிட்கான் 2019 மாநாட்டில் புதுமையான முறையில் **மதுரை ரன்** என்ற பெயரில் மினி மாரத்தான் ஓட்டப்போட்டி நடத்தப்பட்டது. ஓராண்டு நிறைவை கொண்டாடும் வகையில், ஆன்லைன் மூலம் ஜூம்பா நடன நிகழ்ச்சி கடந்த 02.08.2020 அன்று காலை 8 முதல் 9 மணி வரை ஒரு மணி நேர நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| Program | : | **MADURAI RUN - I ANNIVERSARY CELEBRATION** |
| Date | : | 02.08.2020 |
| Venue | : | Virtual Event (Zoom App.) |
| Chief Guest(s) | : | Zumba Dancers |
| Presided by | : | Mr. Kumaran B Jaghuva, President, SCC |




### After Corona Relaxation - SCC Conducted a First program to Meet SCC Members

| | | |
|---|---|---|
| Program | : | **RELAX** |
| Date | : | 06.10.2020 |
| Venue | : | Sourashtra Chamber of Commerce |
| Chief Guest(s) | : | Mr. S.K.R. Ramesh, M/s. Ramesh Cottage Industries, Mdu. |
| Presided by | : | Mr. Kumaran B Jaghuva, President, SCC |



### First Business Vertical Meet conducted - For Builders and Real Estate Sectors

| | | |
|---|---|---|
| Program | : | **Land Purchase and Plan Approval Awareness** |
| Date | : | 27.10.2020 |
| Venue | : | Sourashtra Chamber of Commerce |
| Chief Guest(s) | : | Er. A. Vijayan, Assistant Director, DTCP |
| Presided by | : | Mr. T.R. Mohanram, Vice President, SCC |



| | | |
|---|---|---|
| Program | : | **BENEFITS AND PROCESS ON GeM, TReDS, UDYAM REGN., & CHAMPIONS** |
| Date | : | 03.11.2020 |
| Venue | : | Sourashtra Chamber of Commerce |
| Chief Guest(s) | : | Mr. K.R. Gnanasambandhan, President, Lagu Udyog Bharati, Mdu. |
| | | Mr. P.J. Bansidhar, Jt. Secretary, Lagu Udyog Bharati, Mdu. |
| Presided by | : | Mr. Kumaran B Jaghuva, President, SCC |



### Business Vertical Meet - For Printers

| | | |
|---|---|---|
| Program | : | **PRINTING BAG AWARENESS** |
| Date | : | 24.11.2020 |
| Venue | : | Sourashtra Chamber of Commerce |
| Chief Guest(s) | : | Mr. N.K. Neelakantan, President, The Mdu Printers Association |
| | | Mr. T.R. Mohanram, M/s. Vignesh Offset, Madurai. |
| Presided by | : | Mr. Kumaran B Jaghuva, President, SCC |




| | | |
|---|---|---|
| Program | : | **NEW LABOUR CODE 2020** |
| Date | : | 01.12.2020 |
| Venue | : | Sourashtra Chamber of Commerce |
| Chief Guest(s) | : | Mr. L.V. Jothiprakash, Advocate / Labour Mngt. Consultant, Mdu. |
| Presided by | : | Mr. T.R. Mohanram, Vice President, SCC |



## ராஷ்ட்ரபந்து ஸ்ரீமான் L.K. துளசிராம் B.A. B.L., அவர்களின்

## பிறந்த நாள் சிறப்பு நிகழ்ச்சி மற்றும் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

மதுரை ராஷ்ட்ரபந்து **ஸ்ரீமான் எல்.கே. துளசிராம்** அவர்களின் 151வது பிறந்த நாள் சேம்பர் வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்கள் சமூக மக்களுக்கு பல்வேறு பயனுள்ள செயல்களை செய்தவர். வங்கி, பள்ளி கல்லூரிகள், இட ஒதுக்கீடு, மின்சாரப் பயன்பாடு என மனிதர்களின் அத்தியாவசியத் தேவைகளை முதன் முதலில் கொண்டு வரச் செய்தவர். அவரின் ஆற்றல் மிக்க செயல்பாடுகளை அடுத்த சந்ததியினரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பள்ளி மாணவர்கள் பங்கு பெறச் செய்து கட்டுரைப்போட்டி நடத்தப்பட்டது.

இந்த கட்டுரைப்போட்டிக்கு நிலையூர் **N.K. குப்பய்யன் ரத்னாமணி பள்ளி** மாணவர்கள் மற்றும் தெப்பக்குளம் **ஸ்ரீமந் நாயகி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி** மாணவர்களும் பங்கு கொண்டனர். கட்டுரைப்போட்டியில் பங்குகொண்டதற்கும், முதல் மூன்று பரிசுகளை வென்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை அளிக்க ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களின் பிறந்த நாளான 14.01.2021 அன்று சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. **S.S. சரவணன்** அவர்களும், கௌரவ விருந்தினராக தொழிலதிபர் திரு. **S.R. சுந்தர்நாத்,** உரிமையாளர், அமர்டெக் அவர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். கட்டுரைப்போட்டிக்கு நடுவராக இணைச் செயலாளர் திரு. K.K. **குபேந்திரன்** அவர்கள் இருந்தார். நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

இணைச்செயலாளர் திரு. **J.S. சாயிஜீவன்** மற்றும் இதழ்க்குழுத் தலைவர் திரு. **B.S. ஜெனார்த்தனன்** ஆகியோர் சிறப்பு விருந்தினர் மற்றும் கௌரவ விருந்தினரை மிக அருமையாக அறிமுகம் செய்தனர்.


சிறப்பு விருந்தினர் தனது உரைக்கு முன் போட்டியில் பங்கு கொண்ட மற்றும் முதல் மூன்று பரிசுகைள வென்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் சிறப்புப் பரிசுகள் சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. **சரவணன்** மற்றும் கௌரவ விருந்தினர் திரு. S.R. **சுந்தர்நாத்** அவர்களின் கரங்களால் வழங்கப்பட்டது.

சிறப்பு விருந்தினர் திரு. **S.S. சரவணன்** அவர்கள் பேசுகையில், அடுத்த தலைமுறையினருக்கு ஸ்ரீ மான் எல்.கே. துளசிராம் அவர்களின் ஆற்றலை தெரியப்படுத்தவதற்காக சேம்பர் ஏற்பாடு செய்த இந்த முயற்சியைப் பாராட்டினார். பிறகு, ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் ஆக்கப்பூர்வ செயல்பாடுகளை மாணவர்களுக்கு புரியும்படியும் மிக எளிமையாக அருமையாக பேசினார். மொழிவாரி சிறுபான்மை மக்கள் நலனிற்காக தமிழக அரசிடம் தாம் கோரிக்கை வைத்துள்ளதாகவும், விரைவில் அது நடைமுறை கொண்டு வந்தால் நம் சமூகம் மேலும் வளர்ச்சி பெரும் என்றும் கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர் மற்றும் கௌரவ விருந்தினர்களுக்கும், இரண்டு பள்ளி நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்களுக்கும் சேம்பர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தது. இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. **K.K. தினேஷ்** அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மாணவர்களுக்கு சிறப்புப் பரிசுகள் தம் நிறுவனத்தின் சார்பாக வழங்கிய கௌரவ விருந்தினர், தொழிலதிபர் திரு. **S.R. சுந்தர்நாத்** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

Watch program full video on **www.facebook.com/sourashtrachamberofcommerce**






https://m.facebook.com/story.php?story_fbid=818647348686868&id=705175606261210&sfnsn=wiwspmo

https://youtu.be/-JMVniVMLr0

























ஸௌராஷ்ட்ர இன மக்களுக்காக, ஸ்வதேஷ் வாணால் அவர்களால்
ஸௌராஷ்ட்ர மாத நாட்காட்டி வடிவமைக்கப்பட்டது.
பாஸ்கர் வாணால், ரமணி மூர்த்தியம்மாள், ரமணி மாணிக்கா,
ஸுப்ரமணியன் ஓபுளா மற்றும் செந்தில்குமார் கொண்டா ஆகியோர்
இதற்கு உறுதுணையாக இருந்தனர். இந்த மாத நாட்காட்டி
நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸில் வெளியீடு செய்யப்பட்டது.

## இணையம் வழியாக ஆதார் அப்டேட் செய்வது எப்படி?




ஆதார் அமைப்பின் அனுமதிப்படி, மொத்தம் 32 ஆவணங்கள் அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆதார் அப்டேட் செய்ய இரண்டு வழிகள் உள்ளன.

ஆதாரின் அதிகாரப்பூர்வ இணையப்பக்கமான uidai.gov.in என்ற முகவரியில் சென்று 'update Aadhaar' என்ற வசதியில் அப்டேட் செய்யலாம் அல்லது இ-சேவை மையங்களிலும் நீங்கள் நேரடியாகச் சென்று ஆதார் விவரங்களை அப்டேட் செய்ய முடியும்.

இணைய வழியாக அப்டேட் செய்ய விரும்புவோர், உதாரணத்திற்கு முகவரி மாற்றத்தை அப்டேட் செய்வதற்கு uidai.gov.in என்ற இணையப் பக்கத்தில் சென்று 'update Aadhaar' என்ற வசதியை கிளிக் செய்து, 'update your address online' என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

அடுத்த பக்கத்தில் உங்களது மொபைல் எண்ணைப் பதிவிட்டு 'get OTP' என்பதை கிளிக் செய்யவும். உங்களது மொபைல் எண்ணுக்கு ஒரு ஓ.டி.பி வரும். அதைப் பதிவிட்டு சமர்ப்பிக்கவும்.

'address update' என்பதில் சென்று உங்களது முகவரி குறித்த விவரங்களைப் பதிவிடவும். இதன் பின்னர் முகவரிக்கு உண்டான ஆவணங்களைப் பதிவேற்றம் செய்து சமர்ப்பிக்கவும். இதன் பின்னர் உங்களுக்கு ரெஃபரன்ஸ் நம்பர் ஒன்று வழங்கப்படும். அதை வைத்து நீங்கள் ஆதார் மற்ற விவரங்களை டிராக் செய்ய முடியும்.

- தமிழ் சமயம்

## PAN Card வைத்திருக்கும் ஒவ்வொரும் வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டுமா?

இந்தியாவின் அனைத்து விதமான பணப் பரிவர்த்தனைக்கும் பான் கார்டு தேவை. இது ஒரு நபரின் நிதி நிலை பற்றிய தகவல்களை அறிய வருமான வரித்துறை மூலம் வழங்கப்படுகிறது. PAN Card வைத்திருக்கும் ஒவ்வொரு நபரும் வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.

வருமான வரி செலுத்த விரும்பும் அனைவரிடமும் PAN Card இருக்க வேண்டியது கட்டாயமாகும். அதே போல், வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்யும் போது ஆதார் அட்டையுடன் பான் அட்டையை இணைக்கப்பட்டிருப்பதும் மிகவும் முக்கியம். இது இல்லாமல் ITR செய்யபடுத்தப்படாது. PAN Card இல்லாமல் உங்கள் உண்மையான வரி தொகையின் அளவை அறிய முடியாது. PAN Card மூலம் வரி ஏய்ப்பையும் தவிர்க்க முடியும்.

PAN Card உள்ளவர்கள் அனைவரும் ITR தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை. மறுபுறம், ஒரு நபர் வருமான வரிச் சட்டம், 1961-ன் பிரிவு 139ன் கீழ் வந்தால், அவர்கள் வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும். இந்த பிரிவின் கீழ், குறிப்பிடப்பட்ட வருமானத்தின் கீழ் வரும் ஒவ்வொரு நபரும் வருமான வரி விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும். PAN Card வைத்திருக்கும் ஒரு நபரது வருமானம், வருமான வரி விதிக்கக்கூடிய வருமான வரம்பில் இல்லை என்றால், அவர் வருமான வரி தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை. இது தவிர, சில முக்கியமான பணிகளுக்கும் PAN Card கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

